# கோவிட்-19 தொற்று பரவலை எதிர்கொள்ளுமுகமாக கூடுதல் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் அறிமுகம் செய்கிறது

***மாகாண அரசின் வழிகாட்டுதலைப் பின்பற்றி மீட்சிக்கான மாற்றியமைக்கப்பட்ட 2 ஆம் நிலைக்குள் நகரம் நுழைகிறது***

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 9, 2020) – பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பின் பரிந்துரைகளுக்கு ஏற்பவும் மாகாண அரசின் இன்றைய அறிவிப்பினைத் தொடர்ந்தும், ப்ராம்ப்ட்டன் நகரமானது மாற்றியமைக்கப்பட்ட 2 ஆம் நிலைக்குள் ப்ராம்ப்ட்டன் நகரம் நுழைகிறது; இது கோவிட்-19 தொற்றுப்பரவலின் வேகத்தைக் குறைப்பதற்கேயாகும்.

அக்டோபர் 1 ஆம் தேதி 2020 சனிக்கிழமை நள்ளிரவு 12.01 லிருந்து பின்வரும் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் 28 நாட்களுக்கு அமலில் இருக்கும் மற்றும் 'நாட்கள் போகப்போக' மீள்பார்வை செய்யப்படும்:

**சிற்றுண்டியகங்கள், மதுபார்கள் மற்றும் உணவு நிறுவனங்கள்**

கோவிட் தொற்றுப்பரவலின் வேகத்தைக் குறைக்க உதவுவதற்காக, அக்டோபர் 1 ஆம் தேதி 2020 சனிக்கிழமை நள்ளிரவு 12.01 லிருந்து, தொகுப்பாக இருக்கும் உணவுக்கடைகள் உள்ளிட்ட சிற்றுண்டியகங்கள், மதுபார்கள் மற்றும் உணவு நிறுவனங்கள் உட்புறமாக உட்காரவைத்து உணவு பரிமாறும் சேவைகளை நிறுத்திவிட வேண்டும். பொட்டலம் கட்டி எடுத்துச் செல்லுதல் மற்றும் உணவை வாங்கிக்கொண்டு வெளியில் இருந்தபடி உண்பது அனுமதிக்கப்படுகிறது.

பீல் பகுதி குடியிருப்பு வாசிகளைக் காப்பதற்காக தன்னார்வமாகவே பொது நல எண்ணத்துடன் இந்த நடவடிக்கையை தாங்களாகவே பல சிற்றுண்டியகங்கள், மதுபார்கள் மற்றும் உணவு நிறுவனங்கள் செய்ய முன் வந்திருக்கிறார்கள்; ஆனாலும் மாகாண அரசின் மற்றும் பீல் பகுதியின் பரிந்துரைகளுக்கு இணங்காதிருக்கும் எந்த வணிகமும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் பிரச்சாரச் சட்டத்தின் கீழான நடவடிக்கைகளுக்கு ஆளாக நேரும்.

உணவகங்களில் இருந்து பொட்டலம் கட்டி எடுத்துச் செல்லும் வசதியை நகரவாசிகள் உபயோகித்து உள்ளூர் உணவு நிறுவனங்களுக்கு தங்கள் ஆதரவை நல்குமாறு ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது.

**மேலதிக அமைப்புக்கள் மூடப்படுகின்றன**

அக்டோபர் 1 ஆம் தேதி 2020 சனிக்கிழமை நள்ளிரவு 12.01 லிருந்து, பின் வரும் நிறுவனங்கள் மூடப்படும்:

- உள்ளரங்க உடற்பயிற்சிசாலைகள் மற்றும் உடற்தகுதி மையங்கள் (அதாவது உடற்பயிற்சி வகுப்புக்கள் மற்றும் பளு தூக்கும் பயிற்சி மனைகள்), இதில் நகரின் பொழுதுபோக்கு வசதிக்கான இடங்களுக்கு உள்ளாக இருக்கும் உடற்தகுதி சாதனங்களும் அடங்கும்.
- நிகழ்த்து கலை மையங்கள் மற்றும் அரங்குகள்; இதில் நகரத்திற்கு சொந்தமான இடங்களும் அடங்கும்.
- கேஸினோக்கள், பிங்கோ அரங்குகள் மற்றும் இதர கேளிக்கை விளையாட்டு நிறுவனங்கள்
- உள்ளரங்க திரையரங்குகள்
- குதிரைப்பந்தய களத்தில் பார்வையாளர் பகுதிகள்
- பரஸ்பர செயல்புரியும் கண்காட்சிகள் அல்லது அருங்காட்சியகங்கள், புகைப்பட காட்சியகங்கள், மிருகக் காட்சி சாலைகள், அறிவியல் மையங்கள், பிரபலமான கட்டிடங்கள் முதலானவை.

**மனிதர்கள் கூடும் எண்ணிக்கையைக் குறைத்தல்**

அக்டோபர் 1 ஆம் தேதி 2020 சனிக்கிழமை நள்ளிரவு 12.01 லிருந்து, பின்வரும் எண்ணிக்கைக்கு குறைவான நபர்கள் மட்டுமே ஒன்று கூட வேண்டும்:

- சுற்றுலா மற்றும் வழிகாட்டி எண்ணிக்கையானது, உள்ளரங்கத்தில் 10 பேருக்கும் குறைவானவர்கள் மட்டுமே மற்றும் திறந்தவெளிகளில் 25 பேருக்கும் குறைவானவர்கள் மட்டுமே
- ரியல் எஸ்ட்டேட் திறந்தவெளி இடங்கள் 10 பேருக்கும் குறைவானவர்கள் மட்டுமே
- நேரில் செய்யப்படும் ஆசிரியர் பணி மற்றும் கற்றுக்கொடுத்தலானது, உள்ளரங்கத்தில் 10 பேருக்கும் குறைவானவர்களுக்கு மட்டுமே மற்றும் திறந்தவெளிகளில் 25 பேருக்கும் குறைவானவர்களுக்கு மட்டுமே; இதில் விதிவிலக்காக இருப்பவை, பள்ளிகள், குழந்தைகள் காப்பகங்கள், பல்கலைக் கழகங்கள், கலை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தனியார் தொழிற்கல்வி அமைப்புக்கள் ஆகியவையாகும்.
- சந்திப்புக் கூடங்கள் மற்றும் நிகழ்வுகள் நடக்கும் இடங்களில் உள்ளரங்கத்தில் 10 பேருக்கும் குறைவானவர்களுக்கு மட்டுமே மற்றும் திறந்தவெளிகளில் 25 பேருக்கும் குறைவானவர்களுக்கு மட்டுமே
- அணியாக இருந்து விளையாடும் விளையாட்டுப் பயிற்சிக்கான வகுப்புகள் மட்டுமே நடைபெற வேண்டும் விளையாட்டுக்கள் அல்லது போட்டிகள் கூடாது)
- இந்த வாரத்தில் நடக்கும் என நாள் குறிக்கப்பட்ட திருமண வரவேற்பு நிகழ்ச்சிகள், இப்போது நடைமுறையில் இருக்கின்ற சுகாதார விதிகளுடன் மேற்கொள்ளப்படலாம். அக்டோபர் 13 ஆம் தேதி, 2020 செவ்வாய்க்கிழமை முதல் பொது சுகாதார விதிமுறைகள் அனைத்தையும் பின்பற்றி நடைபெறுகின்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சிகளுக்கு, புதுப்பிக்கப்பட்ட சுகாதார நடவடிக்கைகள் பொருந்தும்; இதன் படி உள்ளரங்கத்தில் 10 பேருக்கும் குறைவானவர்கள் மட்டுமே மற்றும் திறந்தவெளிகளில் 25 பேருக்கும் குறைவானவர்கள் மட்டுமே கூடலாம்.

**சமூகக் கூட்டங்களில் கூடும் நபர்களின் எண்ணிக்கை வரம்புகள் மற்றும் உடல்ரீதியான சமூக விலகல்**

ப்ராம்ப்ட்டன் நகரிலும் பீல் பிராந்தியம் மூழுவதிலுமாக அனைத்து சமூக கூட்டங்கள் மற்றும் ஒழுங்கு செய்யப்பட்ட பொது நிகழ்ச்சிகளில், மற்றும் உள்ளரங்கத்தில் உடல்ரீதியான சமூக விலகல் பேண முடியும் என்னும் இடங்களில், உள்ளரங்கங்களில் 10 பேருக்கும் குறைவானவர்கள் மற்றும் திறந்தவெளிகளில் 25 பேருக்கும் குறைவானவர்கள் மட்டுமே கூடலாம்.

கோவிட்-19 தொற்று பரவல் ஆபத்தைக் குறைப்பதற்காக, பீல் பப்ளிக் அமைப்பானது மற்ற மனிதர்களுடனான உடல்ரீதியான தொடுதலைக் குறைக்க, கூட்டங்களில் எண்ணிக்கையை சிறிதாக்க, சமூக வட்டங்களை அவரவர் குடும்பத்தினருடன் அல்லது அத்தியாவசிய அக்கறை எடுத்துக்கொள்பவர்களுக்குள்ளாகவே சுருக்கிக்கொள்ள, பரிந்துரைக்கிறது. இந்த வாரத்தில் நடைபெற இருக்கும் நன்றி நவிலல் கொண்டாட்டங்களை அவரவர் வீட்டாருடன் மட்டுமே வரம்பு குறித்துக்கொள்ளுமாறு பீல் பப்ளிக் அமைப்பானது பரிந்துரைக்கிறது.

தனித்து வாழும் நபர்கள் அல்லது தங்கள் வீட்டார் அல்லாதோருடன் தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள், மற்றவர்களுடன் கூடியிருக்கும் நேரத்தைக் குறைப்பது, உடல்ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிப்பது, முக கவசம் அணிவது மற்றும் கைகளைக் கழுவுவது ஆகியவற்றுக்காக பீல் ப்ப்ளிக் அமைப்பு பரிந்துரைக்கிறது. உடல்நலமில்லாவிட்டால், நேரில் சந்திக்காமல் இருந்தபடி, தம்மை சோதித்துக்கொள்வதுடன், தனிமைப் படுத்திக்கொள்ளவும் வேண்டும்.

ப்ராம்ப்ட்டன் நகர கோவிட் -19 அவசர நடவடிக்கைகள் உப சட்டத்தின் கீழாக, உடல்ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிக்காத தனி நபர்களுக்கு குறைந்தபட்சமாக $500, மற்றும் அதிகபட்சமாக $100,000 வரையிலும் ஒவ்வொரு மீறலுக்கும் அபராதம் விதிக்கப்படும்.

உப சட்டத்தின் கீழாக நகராட்சி ஒழுங்குமுறைகள் கூறுபவை:

- பொது மக்களுக்கான கட்டிடங்களில் இருக்கும் ஒவ்வொரு மனிதரும் மற்ற ஒரு நபரிடமிருந்து குறைந்தது 2.0 மீட்டர் தூரம் தள்ளி இருப்பதைக் கடைப்பிடிக்க வேண்டும்; இதில் அதே கட்டிடத்தில் தங்கியிருக்கும் நபர்கள் விதிவிலக்கு பெறுவார்கள்.
- எந்த ஒரு வணிக அமைப்பும் தங்கள் இடத்திற்கு வரும் அமைப்புக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ நபர்கள் 2.0 மீட்டருக்கும் குறைவான தூரத்தில் அமர்வதையோ அல்லது நிற்பதையோ அனுமதிக்கக் கூடாது ; இதில் இதில் அதே கட்டிடத்தில் தங்கியிருக்கும் நபர்கள் பணியாளர்கள் விதிவிலக்கு பெறுவார்கள்.

குடியிருப்பு வாசிகளும் வணிக அமைப்புக்களும் இப்படி இணக்கமில்லாமல் நடப்போர் பற்றி 311 என்ற எண்ணிற்கு அழைத்து புகார் தெரிவிக்கலாம்.

**முகக் கவசங்கள் கட்டாயம்**

கட்டாயமான முகத்திரைகள் உப சட்டம் கீழாக ப்ராம்ப்ட்டன் நகருக்குள்ளாக மருத்துவம் அல்லாத முக கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணிவது கட்டாயமாகிறது. பொது நிறுவன அமைப்புக்கள் மற்றும்

வணிக நிறுவனங்கள் தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்ற உள்ளரங்க பகுதிகளில் இருக்கும் அனைவரும் முக கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணிவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்த உபசட்டம் சில தனி நபர்களுக்கு விதிவிலக்கு அளிக்கிறது; இதில் மருத்துவ காரணங்களுக்காக முக கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணிய முடியாத பின்வரும் நபர்கள் அடங்குவார்கள்; இரண்டு வயதுக்கு குறைவான குழந்தைகள்; அல்லது அவசர ஆணைகளுக்கு ஏற்ப விளையாட்டு செயல்பாடுகளில் ஈடுபடும் தனி நபர்கள். மேலும் தகவல்களுக்கு வருகைதரவும்: www.brampton.ca/masks

குடியிருப்பு வாசிகளும் வணிக அமைப்புக்களும் இப்படி இணக்கமில்லாமல் நடப்போர் பற்றி 311 என்ற எண்ணிற்கு அழைத்து புகார் தெரிவிக்கலாம்.

**கோவிட்-19 தொற்றுக்கான சோதனை செய்துகொள்ளும் இடங்கள் பற்றிய தகவல்**

பீல் பிராந்தியம் முழுவதிலுமாக இருக்கிற மருந்தாளுமை இடங்கள் மற்றும் மதிப்பீட்டு மையங்களில் இருக்கும் சோதனை மையங்களில் தனிநபர்கள் தங்களைச் சோதித்துக்கொள்ளலாம். அக்டோபர் 6 ஆம் தேதி நிலவரப்படி இந்த அனைத்து மதிப்பீட்டு மையங்கள் மற்றும் தேர்ந்தெடுத்த மருந்தாளுமை இடங்களில் சோதனை செய்துகொள்ள முன்பதிவு செய்வது அவசியமாகும். உங்களுக்கான சோதனை செய்துகொள்ள முன்பதிவு செய்ய மதிப்பீட்டு மையத்தை அணுகவும்.

பீல் பகுதி மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 சோதனை செய்துகொள்ளும் மையங்களின் பட்டியலைப் பார்க்க வருகை தரவும்: பிராந்தியத்தின் website.

***ப்ராம்ப்ட்டன் நகரில் வில்லியம் ஆஸ்லெர்'ஸ் ஹெல்த் சிஸ்டம்(Osler) சோதனை செய்தல்***

சவுத் ஃப்ளெட்ச்சர்ஸ் ஸ்போர்ட்ஸ்ஃப்ளெக்ஸ் இல் ஆஸ்லெர்'ஸ் கோவிட்-19 சோதனை மையம்

கோவிட் – 19 சோதனை செய்துகொள்ள தகுதிவாய்ந்த எவர் ஒருவருக்கும் இப்போது ஆஸ்லெர் அமைப்பானது, ஆன்லைன் மற்றும் தொலைபேசி வழி முன்பதிவு வசதியை வழங்குகிறது. ப்ராம்ப்ட்டன் நகரில் சவுத் ஃப்ளெட்ச்சர்ஸ் ஸ்போர்ட்ஸ்ஃப்ளெக்ஸ் இல் இருக்கின்ற ஆஸ்லெர்'ஸ் கோவிட்-19 சோதனை மையமானது, காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும் மற்றும் நேரம் கிடைப்பதைப் பொருத்து முன்பதிவுகளும் சந்திப்புக்களும் மேற்கொள்ளப்படும்

ஆஸ்லெர்'ஸ் கோவிட்-19 சோதனை மையத்தில் முன் பதிவு செய்து கொள்ளும் வழிகள்:

- ஆன்லைனில் : www.williamoslerhs.ca/coronavirusக்கு வருகை தருக
- தொலைபெசியில்: 905.487.1249 என்ற எண்ணை அழைக்கவும்

காலை 8:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை, வாரத்தின் 7 நாட்களும்.

தயவு செய்து குறித்துக் கொள்ளவும்: ஆஸ்லெர் நிறுவனம் நேரில் வந்து முன்பதிவு செய்வதை நிறுத்திவிட்டனர்.

ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் நலமாக இருத்தலுக்காக பீல் மெமோரியல் மையத்தில் ஆஸ்லெர்'ஸ் கோவிட்-19, சளி மற்றும் சளிக்காயச்சல் மருத்துவகம்

ஆஸ்லெர்'ஸ் கோவிட்-19, சளி மற்றும் சளிக்காயச்சல் மருத்துவகமானது, கோவிட்-19 சோதித்தலுக்கான காரணி கொண்ட நோயாளிகள் போகிறபோக்கில் வந்தாலும், அதற்கான அடையாளம் இருப்பவர்கள் மருத்துவரைக் காண விரும்பினாலும் அவர்களையும் தொடர்ந்து பார்ப்பார்கள்

சவுத் ஃப்லெட்ச்சர்ஸ் ஸ்போர்ட்ஸ்ஃப்ளெக்ஸ் இல் இருக்கின்ற ப்ராம்ப்ட்டன் நகர ஆஸ்லெர்'ஸ் சோதனை மையம் மற்றும் பீல் மெமோரியல் மையத்தில் இருக்கின்ற கோவிட்-19, சளி மற்றும் சளிக்காய்ச்சலுக்கான மருத்துவகம் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும் www.williamoslerhs.ca/coronavirus

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca